**கவனிக்க -** 2024.12.13 ஆந் திகதிய 2415 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழி மூலம் )

**கவனிக்க -** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2416 - 2024 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2024.12.20**

2416 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 2384 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தயோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள் | 2388 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 20ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2383- B082635 - 5,403 (2024/12)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - களுவாஞ்சிக்குடி

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், அரசுடைமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.12. 27 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன்னனுமதியுடன் அன்றைய தினம் காலை 08.30 மணி முதல் 09.30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப்பொருட்களை ஏலத்திலிருந்து மீளப்பெறுவதற்கான அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப்பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்பட்டும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல்வேண்டும்.

J.B.A. றஞ்சித் குமார்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2024.12.11.

### விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| *இல.* | *சான்றுப் பொருள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | துவிச்சக்கர வண்டி | 05 |
| 2. | நீர் இறைக்கும் இயந்திரம் | 04 |
| 3. | எண்ணெய்ப் பம்ப் | 01 |
| 4. | பால் கொள்கலன் | 01 |
| 5. | சிலிண்டர் | 02 |
| 6. | ஆற்றுமணல் | 12 கியுப் |
| 7. | வயல் மண் | 4, 3/4 கியுப் |

| *இல.* | *சான்றுப் பொருள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| 8. | பெரிய பானை | 10 |
| | அலுமினியம் சட்டி | 22 |
| 10. | கேஸ் அடுப்பு | 04 |
| 11. | இலத்திரனியல் தராசு | 01 |
| 12. | மேசை தராசு | 01 |
| 13. | சவள் | 20 |

12– 324

---

**சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - குச்சவெளி**

2024.12.21 ஆந் திகதி நடைபெறவிருந்த ஏலவிற்பனை பிற்போடல்

மேற்படி விடயம் தொடர்பாக 2024.12.06 ஆந் திகதிய வர்த்தமானியில் குச்சவெளி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் 2024.12.21 ஆந் திகதி நடைபெறவிருந்த ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

இவ் ஏல விற்பனையானது எதிர்வரும் 2025.01.11 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு குச்சவெளி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றேன்

K. ஜீவராணி,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
திருகோணமலை,
2024.12.16.

12– 326

**நீதிவான் நீதிமன்றம் - சம்மாந்துறை**

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட, மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.12.28 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப்பொருட்களை ஏலத்திலிருந்து மீளப்பெறுவதற்கான அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப்பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப்பெற்றுக்கொண்ட பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனைதொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விருப்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல்வேண்டும்.

T. கருணாகரன்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை ,
2024.12.09.

ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| *தொ.இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப் பொருட்கள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 1. | 29891/ MT/ 23 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 2. | AR/ 693/ 24 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 3. | 33180/ E/ 24 | | அடுப்பு | 01 |
| 4. | 33180/ E/ 24 | | கேஸ் சிலிண்டர் | 01 |
| 5. | 33180/ E/24 | | அலுமினிய சட்டி | 01 |
| 6. | 33079/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |
| 7. | 33335/ Misc/ 24 | | சவள் | 01 |
| 8. | 33078/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |

ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| *தொ.இல.* | *வழக்கிலக்கம்* | *வாகனப் பதிவு இல.* | *சான்றுப் பொருட்கள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 9. | 33085/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |
| 10. | 32841/ Misc/ 24 | | சவள் | 01 |
| 11. | 32840/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |
| 12. | 32913/ Misc/ 24 | | சவள் | 01 |
| 13. | 32839/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |
| 14. | 32837/ Misc/ 24 | | சவள் | 01 |
| 15. | 32391/ Misc/ 24 | | சவள் | 01 |
| 16. | 32842/ Misc/ 24 | | மண்வெட்டி | 01 |
| 17. | 33012/ Misc/ 24 | | இரும்பு வாளி | 03 |
| 18. | 33012/ Misc/ 24 | | சவள் | 02 |
| 19. | 33012/ Misc/ 24 | | இரும்பு தகடு | 01 |
| 20. | 33051/ Misc/ 24 | | இரும்பு வாளி | 01 |
| 21. | 33051/ Misc/ 24 | | சவள் | 01 |
| 22. | No Number | | டியுப் லைட் கவர்கள் | 10 |
| 23. | No Number | | கேக் தட்டங்கள் | 11 |
| 24. | No Number | | எண்ணெய் வடிப்பான் | 02 |
| 25. | | | ஆற்று மணல் | 15 cubes |
| 26. | | | ஊத்த மண் | 9 cubes |

12-290

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் கீழ்க் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

*கம்பனியின் பழைய பெயர்* : க்லெக்சோ வெல்கம் சிலோன் லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம்* : பீபி 542
*பதிவு அலுவலக முகவரி* : இல.121, காலி வீதி, கல்தேமுல்ல, மொரடுவ
*கம்பனியின் புதிய பெயர்* : ஹேலியோன் லங்கா என்டர்ப்ரைசஸ் லிமிட்டட்

ஹேலியோன் லங்கா என்டர்ப்ரைசஸ் லிமிட்டட்,
ஜேசி மற்றும் கம்பனி செயலாளர்கள்.

12– 236

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் கீழ்க் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

*கம்பனியின் பழைய பெயர்* : ஸ்மித்க்லைன் பீசம் (பிரைவட்) லிமிட்டட்
*கம்பனியின் இலக்கம்* : பீபி 4436
*பதிவு அலுவலக முகவரி* : உலக வர்த்தக மையம்,நிலை 34,மேற்கோபுரம், எச்செலன் சதுக்கம்,கொழும்பு 01
*கம்பனியின் புதிய பெயர்* : ஹேலியோன் லங்கா (பிரைவட் ) லிமிட்டட்

ஹேலியோன் லங்கா (பிரைவட் ) லிமிட்டட்,
ஜேசி மற்றும் கம்பனி செயலாளர்கள்.

12– 237

---

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்
## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

சன்ஷைன் பெகேஜிங் லங்கா லிமிட்டட் என்ற நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

சன்ஷைன் பெகேஜிங் லங்கா லிமிடட் (கம்பனி இலக்கம் PB 165) மற்றும் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி (கம்பனி இலக்கம் PQ 13) ஆகிய நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007 ஆம்

ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்பு சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப 2024, ஒற்றோபர் 01ஆந் திகதியன்று சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் 2024, ஒற்றோபர் 01 ஆந் திகதியில் இருந்து சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி என தொடரும் .

சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ,
பணிப்பாளர்.

12– 259

---

**பொது அறிவித்தல்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) இன் கீழான ஒருங்கிணைப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) இன் பிரகாரம் Ajax Engineers ( Private) Limited PV 1556 ("Ajax") என்ற கம்பனி General Accessories and Coating ( Private) Limited –PV 204284("GAC") என்ற கம்பனியுடன் ஒருங்கிணைவதாக Ajax Engineers ( Private) Limited இன் பணிப்பாளர்கள் குழு விடுக்கும் அறிவித்தல் "GAC" நிறுவனம் முற்றிலும் "Ajax'' நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இந்த ஒருங்கிணைப்பின் விதிமுறைகளுக்கமைய "GAC" நிறுவனத்தின் பங்குகள் அனைத்தும் எவ்வித கட்டணமுமின்றி அகற்றப்படும் மற்றும் ''GAC'' இன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அனைத்தும் "Ajax'' உரிமைகோரும். இவ் ஒருங்கிணைப்பிற்கு பின், "Ajax'' இன் பணிப்பாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பணிப்பாளர்களாக கடமையாற்றுவார்கள்.

இந் நிறுவனங்களின் பணிப்பாளர்கள் குழு இத் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைப்பிற்கு இந் நிறுவனங்கள் இரண்டும் விருப்பம் தெரிவிப்பதாகவும், ஒருங்கிணைப்பிற்கு பின் உடினடியாக "Ajax'' நிறுவனம் திருப்திகரமாக செயற்படுமெனவும் அறிவிக்கின்றன.

2025, சனவரி 08 ஆந் திகதி முதல் இவ் ஒருங்கிணைப்பு செயற்படுமெனவும் அல்லது இது போன்ற திகதிகள் நிறுவனத்தின் பதிவாளர்கள் நாயகங்களின் மூலம் தீர்மானிக்கப்படும்.

பணிப்பாளர்கள் குழுவின் உத்தரவின்படி,

LOLC Corporate Services (Private) Limited,
செயலாளர்களுக்காக,

Ajax Engineers ( Private) Limited and
General Accessories and Coating
( Private) Limited.

2024, திசெம்பா 09.

.
12– 261

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிமுறைகளின் கீழ் கீழ்க்காணும் விபரங்கள் குறிப்பிடப்படும் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

*கம்பனியின்பெயர்* : ஔராலென்ஸ் (பீவீடீ) எல்டீடி
*பதிவு இலக்கம்* : PV 00311981
*பதிவுத் திகதி* : 2024.10.10
*பதிவு அலுவலக முகவரி* : இல.21,தேவத்த வீதி, ராகம

எஸ். எம். ஏ. டீ. சமரதுங்க,
கம்பனிச் செயலாளர்,

12– 265

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் விதிமுறைகளின் கீழ் கீழ்க்காணும் விபரங்கள் குறிப்பிடப்படும் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

*கம்பனியின்பெயர்* : த ஏசீசீ குளோபல் (பீவீடீ) எல்டீடி
*பதிவு இலக்கம்* : PV 00312675
*பதிவுத் திகதி* : 2024.10.14
*பதிவு அலுவலக முகவரி* : இல.724, காலி வீதி,கொள்ளுப்பிட்டி, திம்பிரிகஸ்யாய

எஸ். எம். ஏ. டீ. சமரதுங்க,
கம்பனிச் செயலாளர்,

12– 266

---

**எஸ்கேசீ டிரவல்ஸ் லிமிட்டெட்**
**பதிவு இல. PB 207**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப அறிவித்தல்**
**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவுக்கு ஏற்ப கம்பனியின் தன்மை மாறுபாட்டால் அதன் பெயர் மாற்றப்படுவதாக அறிவித்தல்**

PB 2007 ஆம் இலக்கம்கொண்ட எஸ்கேசீ டிரவல்ஸ் லிமிட்டெட் கம்பனியின் விசேட விதிமுறைகளின் கீழ் மாற்றியமைக்கப்பட்ட ''கம்பனி"யிற்கு முன்னால் ''தனியார்" எனும் சொல் சேர்க்கப்பட்டுள்ளதாக சகல பங்குதாரர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கு ஏற்ப கம்பனியின் பெயரின் முடிவில் லிமிட்டெட் எனும் சொல்லுக்கு முன்னால் ''தனியார்" எனும் சொல் இணைக்கப்பட்டு கம்பனிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம்

உப பிரிவின் நிபந்தனைகளுக்கு ஏற்ப பெயரின் முடிவில் ( தனியார்) கம்பனி என சேர்த்து அதன் பெயர் (ESKAYCEE TRAVELS ( PRIVATE) LIMITED எனுமாறு வாசிக்கப்படல் வேண்டும்.

கம்பனிச் செயலாளர்,

.
12– 321

---

**நிறுவனங்கள் பதிவாளர் நாயகத்திடம் இருந்து 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம்**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 இன் கீழான ஒருங்கிணைப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 ஆவது பிரிவை பின்பற்றி, ''Niriella Foundation'' என்றபெயர் மற்றும் வடிவத்தை அந்தப்பெயரின் முடிவில் Limited என்ற மேலதிகச்சொல் இன்றி வரையறுக்கப்பட்டபொறுப்புடன் பதிவுசெய்வது நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கு கோரிக்கை விடுத்து உரிமம் ஒன்றைபெறுவதற்காக நிறுவனங்கள் பதிவாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

கூறப்பட்ட நிறுவனத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட நோக்கங்கள்

(I) நோக்கங்கள்;

(a) குறைந்த வருவாயுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தமது கற்கைகளை தொடர்வதற்கு புலமைப்பரிசில்கள் மற்றும் நிதி அல்லாத உதவி வழங்கல்.

(b)மேலதிக உதவிகள்தேவையான பகுதிகளில் பாடசாலை வசதிகள் மற்றும் வளங்களை மேம்படுத்தல்.

(c) பிள்ளைகளின் நன்மைக்காக நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

ஆரம்பம் மற்றும் இரண்டாம் நிலை கல்வியில் ஈடுபடாத தரப்பினர்.

நிறுவனத்தின்நோக்கங்கள் மற்றும் மற்றைய ஏற்பாடுகள் சம்மேளனத்தின்பொது விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதோடு, கொழும்பு 03, ஸ்ரீ தர்மகீர்த்தியாராம வீதி, இல. 14 இல் முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரியில் பிரதி ஒன்றை பரீட்சிக்கலாம்.

எந்த ஒரு நபர், நிறுவனம் அல்லது கூட்டு நிறுவனமும் இந்த விண்ணப்பத்திற்கு ஆட்சேபனைதெரிவிப்பதாயின் நிறுவன பதிவாளர் ''சமாகம்மெதுர''. இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,கொழும்பு 10 என்ற முகவரியில் இந்த அறிவித்தல் திகதியில் இருந்து 21 நாட்களுக்குள் அந்த ஆட்சேபனையை தாக்கல்செய்யலாம் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

,

நிறுவன செயலாளர்கள்,

AFA CORPORATE SERVICES (PVT) LTD.

இல. 14, ஸ்ரீ தர்மகீர்த்தியாராம வீதி,
கொழும்பு 03.

12– 310